நகராட்சி அலுவலகம்,

விக்கிரமசிங்கபுரம் நகராட்சி.

நாள் : 14 /08/2026

## சாதரணக் கூட்டம்

விக்கிரமசிங்கபுரம் நகராட்சி நகர்மன்றத்தின் சாதரண கூட்டம் எதிர்வரும் 2026ம் வருடம் **ஆகஸ்ட்** மாதம் 19 தேதி **புதன் கிழமை காலை** 10.30 மணியளவில் **நகர்மன்றத் தலைவர்** அவர்களின் தலைமையில் மன்றக் கூட்ட அரங்கில் வைத்து நடைபெறவிருக்கின்ற சாதரணக் கூட்டத்திற்கான கூட்டப் பொருள்

**பொருள் எண். 1 796**

விக்கிரமசிங்கபுரம் நகராட்சி எல்கைக்குட்பட்ட பகுதியில், உள்ள பல இடங்களில் பொதுமக்கள் பயன்படுத்தப்பட்டு வரும் சாலையின் நடுவே. மின் கம்பங்கள் அமையப்பெற்றுள்ளதால், அப்பகுதி பொதுமக்கள் , வாகன ஓட்டுநர்கள் மற்றும் சில அவசர காலங்களில் அப்பகுதி சாலையினை பயன்படுத்த இயலாத நிலையில் உள்ளதால், சாலையின் நடுவே பொதுமக்களுக்கு இடையூராக உள்ள மின் கம்பங்களை இடம் மாற்றம் செய்யும் பொருட்டு இந்நகராட்சி பொறியாளர் அவர்களால் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது தமிழ்நாடு மின்வாரியத்திற்கு விண்ணப்பம் செய்யப்பட்டதற்கு, தமிழ் மின் வாரியம் மூலம் முதற்கட்டமாக கீழ்க்கண்ட விவரபடியான மின் கம்பங்களை இடம் மாற்றம் செய்திட கேட்பு பெறப்பட்டுள்ளது. அதன் படி மின் வாரியத்திற்கு கேட்பு தொகையினை செலுத்தவும், செலவினத்தை இந்நகராட்சி பொது நிதியில் இருந்து மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கு

| வ.எண் | பகுதி | தொகை ரூ. |
|---|---|---|
| | **டவுன் மின் வாரிய அலுவலகம்** | |
| 1 | வார்டு 6 மேட்டுத்தங்கம்மன் தெரு | 24630 |
| 2 | வார்டு 4 கட்டப்புளி மேட்டுத் தெரு | 15430 |
| 3 | வார்டு 6 மே கட்டபொம்மன் காலணி | 57201 |
| 4 | வார்டு 5 சுகாதார பணியாளர் குடியிருப்பு அருகே | 33890 |
| | **டாணா மின் வாரிய அலுவலகம்** | |
| 5 | டாணா பகுதி ஜெ ஜெ நகர் | 30810 |

**அலுவலகக்குறிப்பு**

பொது மக்களுக்கு இடையூராக சாலையின் நடுவே அமையப்பெற்றுள்ள மின் கம்பங்களை இடம் மாற்றம் செய்ய , பணியின் அவசியம் மற்றும் அவசரம் கருதி, மேற்கண்ட கேட்புத் தொகை ரூ.161961/- மட்டும் இந்நகராட்சி பொது நிதியில் இருந்து செலுத்த மன்ற அனுமதியினை எதிர்நோக்கி , நகர்மன்ற தலைவர்அவர்களின் முன் அனுமதி பெற்று செலவினம் மேற்கொண்டதற்கு மன்றம் அனுமதி வழங்கலாம்

**தீர்மான எண் : 796 / மன்றம் அனுமதிக்கப்பட்டது**

**பொருள் எண். 2**

விக்கிரமசிங்கபுரம் நகராட்சி பகுதியில் உள்ள அம்மா உணவகத்தினை பராமரித்து மேம்பாடு செய்யும் பணி மேற்கொள்ள, வேண்டி, ரூ.2.50 இலட்சம் மதிப்பீட்டிற்கு நகர்மன்றத் தீர்மான எண் 793 நாள் 02/06/2026 ன் படி அனுமதி பெறப்பட்டுள்ளதின் அடிப்படையில் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில், 15.06.2026 அன்று

இணையதளம் வழியாக இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன. வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்குப்பட்டியல் மன்றத்தின் அனுமதிக்கு

| வ.எண் | பணியின் பெயர் | ஒப்பந்தக்காரர் பெயர் | விலைவிகித விவரம் |
|---|---|---|---|
| 1 | விக்கிரமசிங்கபுரம் நகராட்சி அம்மா உணவகம் பராமரிப்பு மற்றும் மேம்பாடு செய்தல் பணி (மதிப்பீடு ரூ.2.50 இலட்சம்) ந.க.எண் 529/ 2026/இ 1 | திருமதி. சுப்புலெட்சுமி ஒப்பந்தக்காரர் விக்கிரமசிங்கபுரம் | 2.71% மதிப்பீட்டைவிட அதிகம் |
| | | திரு. கே.ராஜா ஒப்பந்தக்காரர் விக்கிரமசிங்கபுரம் | 0.01% மதிப்பீட்டைவிட குறைவு |

**அலுவலகக்குறிப்பு**

வரபெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில்., குறைவான ஒப்பந்தப்புள்ளி (0.01% மதிப்பீட்டைவிட குறைவு ) கொடுத்துள்ள ஒப்பந்தக்காரர் திரு. கே.இராஜா விக்கிரமசிங்கபுரம் என்பவரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்று, பணியின் அவசியம் மற்றும் அவசரம் கருதி மன்ற அனுமதியினை எதிர்நோக்கி , நகர்மன்ற தலைவர்அவர்களின் முன் அனுமதி பெற்று பணி உத்திரவு வழுங்கியதற்கு மன்றம் அனுமதிக்கலாம்

**தீர்மான எண் : 797 / மன்றம் அனுமதிக்கப்பட்டது**

**<u>பொருள் எண். 3 798</u>**

விக்கிரமசிங்கபுரம் நகராட்சி பகுதியில் உள்ள அம்மா உணவகத்திற்கு தேவையான பாத்திரங்கள் கொள்முதல் செய்யும் பணிமேற்கொள்ள, வேண்டி, ரூ.1.60 இலட்சம் மதிப்பீட்டிற்கு நகர்மன்றத் தீர்மான எண் 795 நாள் 02/06/2026 ன் படி அனுமதி பெறப்பட்டுள்ளதின் அடிப்படையில் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில், 16.06.2026 அன்று இணையதளம் வழியாக இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன. வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்குப்பட்டியல் மன்றத்தின் அனுமதிக்கு

| வ.எண் | பணியின் பெயர் | ஒப்பந்தக்காரர் பெயர் | விலைவிகித விவரம் |
|---|---|---|---|
| 1 | விக்கிரமசிங்கபுரம் நகராட்சி அம்மா உணவகத்திற்கு தேவையான பாத்திரங்கள் கொள்முதல் செய்தல் பணி (மதிப்பீடு ரூ.1.60 இலட்சம்) ந.க.எண் 529/ 2026/இ 1 | திருமதி. சுப்புலெட்சுமி ஒப்பந்தக்காரர் விக்கிரமசிங்கபுரம் | 8,58% மதிப்பீட்டைவிட அதிகம் |
| | | திரு. கே.ராஜா ஒப்பந்தக்காரர் விக்கிரமசிங்கபுரம் | 1.09% மதிப்பீட்டைவிட குறைவு |

**அலுவலகக்குறிப்பு**

வரபெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில்., குறைவான ஒப்பந்தப்புள்ளி (1.09% மதிப்பீட்டைவிட குறைவு ) கொடுத்துள்ள ஒப்பந்தக்காரர் திரு. கே.இராஜா விக்கிரமசிங்கபுரம் என்பவரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்று, பணியின் அவசியம் மற்றும் அவசரம் கருதி மன்ற அனுமதியினை எதிர்நோக்கி , நகர்மன்ற தலைவர்அவர்களின் முன் அனுமதி பெற்று பணி உத்திரவு வழுங்கியதற்கு மன்றம் அனுமதிக்கலாம்

**தீர்மான எண் : 798 / மன்றம் அனுமதிக்கப்பட்டது**

**<u>பொருள் எண். 4</u>**

விக்கிரமசிங்கபுரம் நகராட்சியின் பொதிகையடி தூய நீரேற்று நிலையத்தில் அம்ரூட் 2.0 திட்டத்தின் கீழ் புதியதாக அமைக்கப்பட்டுள்ள 4 எம்ல்டி கொள்ளளவு கொண்ட குடிநீர் சுத்திகரிப்பு நிலையத்திற்கு தேவையான கூடுதல் மின் பளு (LT Line) அமைக்க இடையூராக ஏற்கனவே அமையப்பெற்ற 119 KVA ( HT Line) மின் மாற்றி , மின் கம்பங்கள் மற்றும் மின்வயர்களை மாற்றியமைத்தல் பணி மேற்கொள்ள, தமிழ்நாடு

மின் வாரிய கண்காணிப்பு பொறியாளர் திருநெல்வேலி அவர்களின் கடிதம் D.No.377 /26 நாள் 03.06.2026 ன் படி, ரூ. 7,15,743/- க்கு மதிப்பீடு தயார் செய்து, இப்பணிகளை TNPDCL ல் பதிவு பெற்ற ஒப்பந்ததாரர் மூலம் மேற்கொள்ள அறிவுறுத்தப்பட்டுள்ளது. அதன் படி பணி மேற்கொள்ள TNPDCL ல் பதிவு பெற்ற ஒப்பந்ததாரர்களிடமிருந்து பெறப்பட்ட 3 விலைப்புள்ளிகளில், தர்ஷன் எலக்ட்ரிக்கல்ஸ் மற்றும் கன்ஸ்டரக்சன் நிறுவன உரிமையாளர் திரு, பொன்ராஜ் என்பவர் குறைவான விலைவிகிதமான ரூ.7,14,510/- விலைப்புள்ளி வழங்கியதின் அடிப்படையில், அன்னார் மூலம் பொதிகையடி தூய நீரேற்று நிலையத்தில் உள்ள மின் மாற்றி , மின் கம்பங்கள் மற்றும் மின்வயர்களை மாற்றியமைத்தல் பணி மேற்கொள்ளவும், செலவினத் தொகையினை இந்நகராட்சி பொது நிதியில் இருந்து மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கு

**அலுவலகக்குறிப்பு**

தமிழ்நாடு மின்வாரிய கண்காணிப்பு பொறியாளர், திருநெல்வேலி அவர்களால் வழங்கப்பட்டுள்ள மதிப்பீட்டினை விட குறைவான விலைவிகிதம் அளித்துள்ள திரு, பொன்ராஜ் விக்கிரமசிங்கபுரம் அவர்களின் விலைப்புள்ளியினை அனுமதித்து, பணியின் அவசியம் மற்றும் அவசரம் கருதி, மன்ற அனுமதியை எதிர்நோக்கி நகர்மன்றத் தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணி உத்திரவு வழங்கியதற்கும், செலவினத்தை இந்நகராட்சி பொதுநிதியில் இருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்

**தீர்மான எண் : 799 / மன்றம் அனுமதிக்கப்பட்டது**

**<u>பொருள் எண். 5</u>**

விக்கிரமசிங்கபுரம் நகராட்சி வார்டு எண் 1 முதல் 10 வரையுள்ள வார்டுகளில் குடிநீர் பம்பிங் மெயின் மற்றும் பகிர்மான குழாய்கள் பழுது நீக்கம் மற்றும் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ள, வேண்டி, ரூ.5.00 இலட்சம் மதிப்பீட்டிற்கு நகர்மன்றத் தீர்மான எண் 788 நாள் 02/06/2026 ன் படி அனுமதி பெறப்பட்டுள்ளதின் அடிப்படையில் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில், 30.07.2026 அன்று இணையதளம் வழியாக இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன. வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்குப்பட்டியல் மன்றத்தின் அனுமதிக்கு

| வ.எண் | பணியின் பெயர் | ஒப்பந்தக்காரர் பெயர் | விலைவிகித விவரம் |
|---|---|---|---|
| 1 | வார்டு எண் 1 முதல் 10 வரையுள்ள வார்டுகளில் குடிநீர் பம்பிங் மெயின் மற்றும் பகிர்மான குழாய்கள் பழுது நீக்கம் மற்றும் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளுதல் (மதிப்பீடு ரூ.5.00 இலட்சம்) ந.க.எண் 750/ 2026/இ 1 | திருமதி. சுப்புலெட்சுமி ஒப்பந்தக்காரர் விக்கிரமசிங்கபுரம் | 0.14% மதிப்பீட்டைவிட குறைவு |
| | | திரு. கே.ராஜா ஒப்பந்தக்காரர் விக்கிரமசிங்கபுரம் | 1.14% மதிப்பீட்டைவிட அதிகம் |

**அலுவலகக்குறிப்பு**

வரபெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில்., குறைவான ஒப்பந்தப்புள்ளி (0.14% மதிப்பீட்டைவிட குறைவு ) கொடுத்துள்ள ஒப்பந்தக்காரர் திருமதி. சுப்புலெட்சுமி விக்கிரமசிங்கபுரம் என்பவரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்று, பணி உத்திரவு வழங்க மன்றம் அனுமதிக்கலாம்

**தீர்மான எண் : 800 / மன்றம் அனுமதிக்கப்பட்டது**

**<u>பொருள் எண். 6</u>**

விக்கிரமசிங்கபுரம் நகராட்சி வார்டு எண் 11 முதல் 21 வரையுள்ள வார்டுகளில் குடிநீர் பம்பிங் மெயின் மற்றும் பகிர்மான குழாய்கள் பழுது நீக்கம் மற்றும் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ள, வேண்டி, ரூ.5.00 இலட்சம் மதிப்பீட்டிற்கு நகர்மன்றத் தீர்மான எண் 788 நாள் 02/06/2026 ன் படி அனுமதி பெறப்பட்டுள்ளதின் அடிப்படையில் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில், 30.07.2026 அன்று இணையதளம் வழியாக இரண்டு

ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன. வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்குப்பட்டியல் மன்றத்தின் அனுமதிக்கு

| வ.எண் | பணியின் பெயர் | ஒப்பந்தக்காரர் பெயர் | விலைவிகித விவரம் |
|---|---|---|---|
| 1 | வார்டு எண் 11 முதல் 21 வரையுள்ள வார்டுகளில் குடிநீர் பம்பிங் மெயின் மற்றும் பகிர்மான குழாய்கள் பழுது நீக்கம் மற்றும் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளுதல் (மதிப்பீடு ரூ.5.00 இலட்சம்) ந.க.எண் 750/ 2026/இ 1 | திருமதி. சுப்புலெட்சுமி ஒப்பந்தக்காரர் விக்கிரமசிங்கபுரம் | 0.14% மதிப்பீட்டைவிட குறைவு |
| | | திரு. கே.ராஜா ஒப்பந்தக்காரர் விக்கிரமசிங்கபுரம் | 1.10% மதிப்பீட்டைவிட அதிகம் |

**அலுவலகக்குறிப்பு**

வரபெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில்., குறைவான ஒப்பந்தப்புள்ளி (0.14% மதிப்பீட்டைவிட குறைவு ) கொடுத்துள்ள ஒப்பந்தக்காரர் திருமதி. சுப்புலெட்சுமி விக்கிரமசிங்கபுரம் என்பவரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்று, பணி உத்திரவு வழங்க மன்றம் அனுமதிக்கலாம்

**தீர்மான எண் : 801 / மன்றம் அனுமதிக்கப்பட்டது**

**<u>பொருள் எண். 7 802</u>**

விக்கிரமசிங்கபுரம் நகராட்சி சின்ன மயிலாறு காணி குடியிருப்பு பகுதியில் புதியதாக எல்இடி விளக்கு அமைக்கும் பணி மேற்கொள்ள, வேண்டி, ரூ.1.40 இலட்சம் மதிப்பீட்டிற்கு நகர்மன்றத் தீர்மான எண் 790 நாள் 02/06/2026 ன் படி அனுமதி பெறப்பட்டுள்ளதின் அடிப்படையில் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில், 30.07.2026 அன்று இணையதளம் வழியாக இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன. வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்குப்பட்டியல் மன்றத்தின் அனுமதிக்கு

| வ.எண் | பணியின் பெயர் | ஒப்பந்தக்காரர் பெயர் | விலைவிகித விவரம் |
|---|---|---|---|
| 1 | விக்கிரமசிங்கபுரம் நகராட்சி சின்னமயிலாறு காணிகுடியிருப்பு பகுதியில் 20 வாட்ஸ் எல்இடி தெருவிளக்குகள் அமைத்தல் ந.க.எண் 0927/ 2026/இ 1 | திருமதி. சுப்புலெட்சுமி ஒப்பந்தக்காரர் விக்கிரமசிங்கபுரம் | 0.71% மதிப்பீட்டைவிட குறைவு |
| | | திரு. கே.ராஜா ஒப்பந்தக்காரர் விக்கிரமசிங்கபுரம் | 1.55% மதிப்பீட்டைவிட அதிகம் |
| | | முத்து இன்டஸ்ட்ரிஸ் மதுரை | 21.89% மதிப்பீட்டைவிட அதிகம் |

**அலுவலகக்குறிப்பு**

வரபெற்ற மூன்று ஒப்பந்தப்புள்ளிகளில்., குறைவான ஒப்பந்தப்புள்ளி (0.71% மதிப்பீட்டைவிட குறைவு ) கொடுத்துள்ள ஒப்பந்தக்காரர் திருமதி. சுப்புலெட்சுமி விக்கிரமசிங்கபுரம் என்பவரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்று, பணி உத்திரவு வழங்க மன்றம் அனுமதிக்கலாம்

**தீர்மான எண் : 802 / மன்றம் அனுமதிக்கப்பட்டது**

**<u>பொருள் எண். 8</u>**

விக்கிரமசிங்கபுரம் நகராட்சி 21 வார்டு பகுதிகளிலும் பழுதடைந்த வால்வுகளை மாற்றம் செய்யும் பணிகள் மேற்கொள்ள, வேண்டி, ரூ.3.00 இலட்சம் மதிப்பீட்டிற்கு நகர்மன்றத் தீர்மான எண் 773 நாள் 26.02.2026 ன் படி அனுமதி பெறப்பட்டுள்ளதின் அடிப்படையில் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில், 30.07.2026

அன்று இணையதளம் வழியாக இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன. வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்குப்பட்டியல் மன்றத்தின் அனுமதிக்கு

| வ.எண் | பணியின் பெயர் | ஒப்பந்தக்காரர் பெயர் | விலைவிகித விவரம் |
|---|---|---|---|
| 1 | விக்கிரமசிங்கபுரம் நகராட்சி 21 வார்டு பகுதிகளில் குடிநீர் விநியோக பயன்பாட்டிற்கான உள்ள வால்வுகள் மாற்றம் மற்றும் பராமரிப்பு பணி ந.க.எண் 752/ 2026/இ 1 | திருமதி. சுப்புலெட்சுமி ஒப்பந்தக்காரர் விக்கிரமசிங்கபுரம் | 0.01% மதிப்பீட்டைவிட குறைவு |
| | | திரு. கே.ராஜா ஒப்பந்தக்காரர் விக்கிரமசிங்கபுரம் | 0.15% மதிப்பீட்டைவிட அதிகம் |

**அலுவலகக்குறிப்பு**

வரபெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில்., குறைவான ஒப்பந்தப்புள்ளி (0.01% மதிப்பீட்டைவிட குறைவு ) கொடுத்துள்ள ஒப்பந்தக்காரர் திருமதி. சுப்புலெட்சுமி விக்கிரமசிங்கபுரம் என்பவரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்று, பணி உத்திரவு வழங்க மன்றம் அனுமதிக்கலாம்

**தீர்மான எண் : 803 / மன்றம் அனுமதிக்கப்பட்டது**

**பொருள் எண். 9**

விக்கிரமசிங்கபுரம் நகராட்சி வார்டு எண் 14 கொட்டராம் பகுதி மயான செல்லும் சாலை பராமரிப்பு பணி மேற்கொள்ள வேண்டி ரூ.4.00 இலட்சம் மதிப்பீட்டிற்கு நகர்மன்றத் தீர்மான எண் 772 நாள் 26.02.2026 ன் படி அனுமதி பெறப்பட்டுள்ளதின் அடிப்படையில் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில், 05.08.2026 அன்று இணையதளம் வழியாக இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன. வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்குப்பட்டியல் மன்றத்தின் அனுமதிக்கு

| வ.எண் | பணியின் பெயர் | ஒப்பந்தக்காரர் பெயர் | விலைவிகித விவரம் |
|---|---|---|---|
| 1 | விக்கிரமசிங்கபுரம் நகராட்சி மேற்கு கொட்டாரம் வார்டு 14 பகுதியில் சாலை மற்றும் மழைநீர் வடிகால் பராமரிப்பு ந.க.எண் 753/ 2026/இ 1 | திருமதி. சுப்புலெட்சுமி ஒப்பந்தக்காரர் விக்கிரமசிங்கபுரம் | 0.01% மதிப்பீட்டைவிட குறைவு |
| | | திரு. கே.ராஜா ஒப்பந்தக்காரர் விக்கிரமசிங்கபுரம் | 0.47% மதிப்பீட்டைவிட அதிகம் |

**அலுவலகக்குறிப்பு**

வரபெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில்., குறைவான ஒப்பந்தப்புள்ளி (0.01% மதிப்பீட்டைவிட குறைவு ) கொடுத்துள்ள ஒப்பந்தக்காரர் திருமதி. சுப்புலெட்சுமி விக்கிரமசிங்கபுரம் என்பவரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்று, பணி உத்திரவு வழங்க மன்றம் அனுமதிக்கலாம்

**தீர்மான எண் : 804 / மன்றம் அனுமதிக்கப்பட்டது**

**பொருள் எண். 10**

திருநெல்வேலி மாவட்ட அட்சித் தலைவர் அவர்களின் தலைமையில் கடந்த06.07.2026 அன்று நடைபெற்ற வாராந்திர சட்டம் மற்றும் ஒழுங்கு ஆய்வு கூட்டத்தில், விக்கிரமசிங்கபுரம் நகராட்சி எல்கைக்குள் உள்ள கோட்டைவிளைப்பட்டி சாலை விளக்கு முதல் அய்யனார்குளம் வரை உள்ள சுமார் 3 கி.மீ நீளமுள்ள சாலைகளில், தெருவிளக்குள் இல்லாமல் இருந்த வருகிறது.இதனால் அப்பகுதி வழியே செல்லும் பொது மக்கள் மற்றும் வாகன ஓட்டிகள் மிகவும் சிரமப்படுவதோடு, இரவு நேரங்களில் அசம்பாவித சம்பங்கள்

நடைபெற வாய்ப்புள்ளதாக பொதுமக்கள் தெரிவித்து வருவதால், அப்பகுதி பொது மக்களின் நலன் கருதியும், அசம்பாவித சம்பவங்களை தவிர்க்கும் பொருட்டு, மேற்கண்ட பகுதியில் நகராட்சி நிர்வாகம் மூலம் நிதி ஒதுக்கீடு பெற்று பணி மேற்கொள்ள அறிவுறுத்தப்பட்டுள்ளது. அதன் படி அப்பகுதியில் புதியதாக மின் கம்பம் அமைத்து எல்இடி தெருவிளக்குகள் அமைக்கவும், ஏற்கனவே உள்ள மின்கம்பத்தில் மின் இணைப்பு பெற்று தெருவிளக்குள் அமைத்தல் ஆகிய பணிகள் மேற்கொள்ள இந்நகராட்சி பொறியாளர் அவர்களால் தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீட்டுத் தொகை ரூ.12.00 இலட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டியும், பணி மேற்கொள்ளவும் அதற்கான செலவினத்தை இந்நகராட்சி பொது நிதியில் இருந்து மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கு

**அலுவலகக்குறிப்பு**

திருநெல்வேலி மாவட்ட அட்சித் தலைவர் அவர்களால் அறிவுறுத்தப்பட்ட இப்பணியினை, அப்பகுதி பொதுமக்களின் நலன் மற்றும் பாதுகாப்பினை கருதி மேற்கொள்ள தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீட்டுத் தொகைக்கு மன்றம் அனுமதிக்கலாம் மற்றும் இப்பணிகளை மேற்கொள்ளவும், செலவினத்தை இந்நகராட்சி பொதுநிதியில் இருந்து மேற்கொள்ளவும் மன்ற அனுமதியினை எதிர்நோக்கி நகர்மன்றத் தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரியதற்கு மன்றம் அனுமதிக்கலாம்

**தீர்மான எண் : 805 / மன்றம் அனுமதிக்கப்பட்டது**

**<u>பொருள் எண். 11</u>**

திருநெல்வேலி மாவட்ட அட்சித் தலைவர் அவர்களின் தலைமையில் கடந்த06.07.2026 அன்று நடைபெற்ற வாராந்திர சட்டம் மற்றும் ஒழுங்கு ஆய்வு கூட்டத்தில், விக்கிரமசிங்கபுரம் நகராட்சி எல்கைக்குள் உள்ள முதலியார்பட்டி வடக்கு தெருவில் சிதிலமடைந்த சாலை மற்றும் வாறுகால்களை அப்பகுதி பொது மக்களின் நலன் கருதி உடன் சரி செய்து கொடுக்க அறிவுறுத்தப்பட்டதின் படி, அப்பகுதியில் சிதிலமடைந்த வாறுகால் மற்றும் சாலைகளை மேம்பாடு செய்யும் பணிகள் மேற்கொள்ள இந்நகராட்சி பொறியாளர் அவர்களால் தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீட்டுத் தொகை ரூ. 4.00 இலட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டியும், பணி மேற்கொள்ளவும் அதற்கான செலவினத்தை இந்நகராட்சி பொது நிதியில் இருந்து மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கு

**அலுவலகக்குறிப்பு**

திருநெல்வேலி மாவட்ட அட்சித் தலைவர் அவர்களால் அறிவுறுத்தப்பட்ட இப்பணியினை, அப்பகுதி பொதுமக்களின் நலன் மற்றும் அவசியம் கருதி மேற்கொள்ள தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீட்டுத் தொகைக்கு மன்றம் அனுமதிக்கலாம் மற்றும் இப்பணிகளை மேற்கொள்ளவும், செலவினத்தை இந்நகராட்சி பொதுநிதியில் இருந்து மேற்கொள்ளவும் மன்ற அனுமதியினை எதிர்நோக்கி நகர்மன்றத் தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரியதற்கு மன்றம் அனுமதிக்கலாம்

**தீர்மான எண் : 806 / மன்றம் அனுமதிக்கப்பட்டது**

**<u>பொருள் எண். 12</u>**

விக்கிரமசிங்கபுரம் நகராட்சி குடிநீர் விநியோக மேல்நிலை நீர்தேக்கத் தொட்டி மற்றும் தரைமட்ட நீர்தேக்கத் தொட்டிகளில் இருந்து நாள் தோறும் குடிநீர் விநியோகம் செய்திட போதிய குடிநீர் விநியோக பணியாளர்கள் மற்றும் வால்ல தொட்டி திறப்பாளர்கள் இந்நகராட்சிக்கு அனுமதிக்கப்படாத நிலையில், குடிநீர் விநியோகம் மற்றும் பராமரிப்பு பணி மேற்கொள்வதில் சிரமம் ஏற்பட்டு வருகிறது. பொது மக்களுக்கு வழங்கக்கூடிய குடிநீர் விநியோகம் பாதிப்படையாமல் இருக்க வேண்டி கீழ்க்கண்ட விவரப்படி ஆட்கொணர்வு வெளிமுகமை மூலம் பணியாளர்களை ஒப்பந்த அடிப்படையில் 3 மாத காலத்திற்கு பணியமர்த்திட வேண்டி, தயார் செய்யப்பட்டுள்ள கீழ்க்கண்ட விவரபடியான மதிப்பீட்டுத் தொகைக்கு மன்ற அனுமதி வேண்டியும் , பணி

மேற்கொள்ளவும் செலவினத்தை இந்நகராட்சி குடிநீர் நிதியில் இருந்து செலவு செய்திட வேண்டியும் மன்றத்தின் அனுமதிக்கு

1. குடிநீர் விநியோகம் பணிக்கு 7 நபர்கள் (3 மாத காலத்திற்கு) ஆட்கொணர்வு வெளிமுகமை மூலம் பணியமர்த்திட – ரூ. 4.20 இலட்சம்
2. குடிநீர் விநியோகம் பணிக்கு 7 நபர்கள் (3 மாத காலத்திற்கு) ஆட்கொணர்வு வெளிமுகமை மூலம் பணியமர்த்திட – ரூ. 4.20 இலட்சம்

**அலுவலகக்குறிப்பு**

விக்கிரமசிங்கபுரம் நகராட்சி பொறியியற் பிரிவில் போதிய திறனற்ற பணியாளர்கள் பணிக்கு அமர்த்தப்படாத நிலையில் குடிநீர் விநியோக அவசியம் மற்றும் அவசரம் கருதி இப்பணியாளர்களை ஆட்கொணர்வு வெளிமுகமை மூலம் ஒப்பந்த அடிப்படையில் 6 மாத காலத்திற்கு பணியமர்த்திட தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீட்டுத் தொகை ரூ. 18.00/- இலட்சத்திற்கும், பணி மேற்கொள்ளவும், செலவினத்தை இந்நகராட்சி குடிநீர் நிதியில் இருந்து செலவு செய்திடவும் மன்றம் அனுமதிக்கலாம்

**தீர்மான எண் : 807 / மன்றம் அனுமதிக்கப்பட்டது**

**பொருள் எண். 13**

திருநெல்வேலி நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் அவர்களின் கடிதம் ந.க.எண் 44/2023/அ1 நாள் 15.07.2026 ல் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநரக அலுவலக பயன்பாட்டிற்காக புதியதாக அச்சு இயந்திரம் (Printer) 1 எண்ணம் பொதுநிதியில் இருந்து கொள்முதல் செய்து வழங்கிடுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளத.அதன் படி மேற்கண்ட அச்சு இயந்திரம் கொள்முதல் செய்யும் பொருட்டு, பெறப்பபட்ட உள்ளூர் விலைப்புள்களில் ஒப்புநோக்கு பட்டியல், பணி மேற்பார்வையாளர் அவர்களால் தயார் செய்யப்பட்டுள்ளது மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. அதன் படி பணி மேற்கொள்ளவும், செலவினத்தை இந்நகராட்சி பொது நிதியில் இருந்து மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கு

| வ.எண் | வேலையின் விவரம் | அஸ்வின் கம்ப்யூட்டர்ஸ் விக்கிரமசிங்கபுரம் | ஸ்மார்ட் கம்ப்யூட்டர்ஸ் , அம்பாசமுத்திரம் | ராஜ் கம்ப்யூட்டர்ஸ் , அம்பாசமுத்திரம் |
|---|---|---|---|---|
| 1 | நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநரக அலுவலக பயன்பாட்டிற்காக புதிய அச்சு இயந்திரம் கொள்முதல் செய்தல் | Rs. 20,000/- | Rs. 20,500/- | Rs. 21,000/- |

**அலுவலகக்குறிப்பு**

வரப்பெற்ற விலைப்புள்ளிகளில் குறைவான விலைப்புள்ளி கொடுத்துள்ள அஸ்வின் கம்ப்யூட்டர்ஸ், விக்கிரமசிங்கபுரம் நிறுவனத்தின் விலைப்புள்ளியை அங்கீகரிக்க வேண்டியும், பணி மேற்கொள்ளவும், செலவினத்தை இந்நகராட்சி பொது நிதியில் இருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண் : 808 / மன்றம் அனுமதிக்கப்பட்டது**

**பொருள் எண். 14**

விக்கிரமசிங்கபுரம் நகராட்சி 21 வார்டு பகுதிகளில் சுமார் 97 கைபம்புகள் நகராட்சி மூலம் பராமரிக்கப்பட்டு, பொது மக்களுக்கு பிற தேவைகளுக்காக தண்ணீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. மேற்கண்ட கைபம்புகளில் அவ்வப்போது ஏற்படும் பழுதுகளை பொது மக்களின் நலன் கருதி உடனுக்குடன் சரி செய்யும் பொருட்டு, நகராட்சி பொறியாளர் அவர்களால் தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீட்டுத் தொகை ரூ.

5.00 இலட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டியும், செலவினத்தை இந்நகராட்சி குடிநீர் நிதியில் இருந்து மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கு

**அலுவலகக்குறிப்பு** :

பொதுமக்களின் நலன் கருதி , கைபம்புகளில் ஏற்படும் பழுதுகளை உடனுக்குடன் சரிசெய்யும் பொருட்டு தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீட்டுத் தொகை ரூ, 5.00 இலட்சத்திற்கும், செலவினத்தை இந்நகராட்சி குடிநீர் நிதியில் இருந்து மேற் கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண் : 809 / மன்றம் அனுமதிக்கப்பட்டது**

**பொருள் எண். 15**

விக்கிரமசிங்கபுரம் நகராட்சிக்குட்பட்ட பொதிகையடி தூய நீரேற்று நிலையத்தில் இருந்து இந்நகராட்சி மூலம் பொது மக்களுக்கு குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. பொது மக்கள் நலன் கருதி , தொற்று நோய் பரவாமல் தடுக்க வேண்டி, விநியோகம் செய்யப்படும் குடிநீரில் Liquid Chlorination Plant மூலம் கோளரின் கலக்கப்பட்டு வருகிறது. மேற்கண்ட Liquid Chlorination Plant க்கு தேவையான Liquid Chlorine கொள்முதல் செய்ய இந்நகராட்சி பொறியாளர் அவர்களால் தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீட்டுத் தொகை ரூ. 10.00/- இலட்சத்திற்கு மன்றம் அனுமதி வழுங்கலாம் மேலும் பணிகள் மேற்கொள்ளவும், , செலவினத்தை இந்நகராட்சி குடிநீர் திட்ட நிதியில் இருந்து செலவு செய்திடவும் மன்றம் அனுமதி வழுங்கலாம்

**அலுவலகக்குறிப்பு**

பொது மக்கள் நலன் கருதி , தொற்று நோய் பரவாமல் தடுக்க வேண்டி, விநியோகம் செய்யப்படும் குடிநீரில் Liquid Chlorination Plant மூலம் கோளரின் கலந்து குடிநீர் விநியோகம் செய்ய ஏதுவாக தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீட்டுத் தொகை ரூ. 10.00/- இலட்சத்திற்கு மன்றம் அனுமதி வழுங்கலாம் மேலும் பணிகள் மேற்கொள்ளவும், , செலவினத்தை இந்நகராட்சி குடிநீர் திட்ட நிதியில் இருந்து செலவு செய்திடவும் மன்றம் அனுமதி வழுங்கலாம்

**தீர்மான எண் : 810 / மன்றம் அனுமதிக்கப்பட்டது**

**பொருள் எண். 16**

விக்கிரமசிங்கபுரம் நகராட்சி தலையணை நீரேற்று நிலையத்தில் உள்ள 20 ஹெச்பி நீர்மூழ்கி மோட்டார், டாணா மேல்நிலை நீர் தேக்கத் தொட்டி 5 ஹெச்பி மோனோ பிளாக் மோட்டார், ஓட்டன் குளம் தரை மட்ட நீர்தேக்கத் தொட்டி 30 ஹெச்பி நீர்மூழ்கி மோட்டார் , வம்பளந்தான் பாறை 5 ஹெச்பி மற்றும் 7.5 ஹெச்பி நீர்மூழ்கி மோட்டார் ஆகியவைகளில் அவ்வப்போது ஏற்படும் பழுதுகளை உடனுக்குடன் சரி செய்யும் பொருட்டு , நகராட்சி பொறியாளர் அவர்களால் தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீட்டுத் தொகை ரூ. 5.00 இலட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டியும், பணி மேற்கொள்ளவும், செலவினத்தை இந்நகராட்சி குடிநீர் நிதியில் இருந்து மேற்கொள்ளவும் மன்றத்தின்அனுமதிக்கு

**அலுவலகக்குறிப்பு** :

குடிநீர் பணியின் அவசியம் கருதி, தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீட்டுத் தொகை ரூ. 5.00 இலட்சத்திற்கும், செலவினத்தை குடிநீர் நிதியில் இருந்து மேற்கொள்ள வேண்டியும் மன்றம் அனுமதிக்கலாம்,

**தீர்மான எண் : 811 / மன்றம் அனுமதிக்கப்பட்டது**

**பொருள் எண். 17**

விக்கிரமசிங்கபுரம் நகராட்சி பகுதியில் 2015-16 ம் ஆண்டு உட்கட்டமைப்பு இடைவெளி நிரப்புதல் நிதியின் கீழ் இராமலிங்கபுரம் பகுதியில் நவீன ஆடு இறச்சி கூடம் அமைக்கப்பட்டுள்ளது. மேற்கண்ட கட்டிடம் கட்டி முடிக்கப்பட்டு 10 ஆண்டுகளுக் மேல் ஆன நிலையில், இக்கட்டிடத்தில் அத்தியவசிய அடிப்படை வசதிகள் குறைபாடு காரணமாக, பயன்பாட்டிற்க கொண்டு வர இயலாமல் உள்ளதால் அதனை உடன் பயன்பாட்டிற்கு கொண்டு வர அறிவுறுத்தி நகராட்சி ஆணையாளர் அவர்களால் குறிப்புரை

வழங்கப்பட்டுள்ளது. எனவே மேற்கண்ட கட்டிடத்தினை மேம்பாடு செய்து, பராமரிப்பு மற்றும் அடிப்படைவசதிகள் மேற்கொள்ளும் பொருட்டு நகராட்சி பொறியாளர் அவர்களால் தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீட்டுத் தொகை ரூ.5.00 இலட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டியும், அதற்கான செலவினத்தை இந்நகராட்சி பொது நிதியில் இருந்து மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கு

**அலுவலகக்குறிப்பு** :

மேற்கண்ட ஆடு இறைச்சி கட்டிடம் கட்டிமுடிக்கப்பட்டு பத்தாண்டுகளுக்கு மேல் பராமரிப்பின்றி பயன்பாட்டிற்கு கொண்டு வர இயலாத நிலையில் உள்ளதால், பணியின் அவசியம் கருதி பராமரிப்பு பணி மேற்கொள்ளும் பொருட்டு தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீட்டுத் தொகை ரூ.5.00 இலட்சத்திற்கு மன்றம் அனுமதிக்கலாம், மேலும் செலவினத்தை இந்நகராட்சி பொது நிதியில் இருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி வழங்கலாம்

**தீர்மான எண் : 812 / மன்றம் அனுமதிக்கப்பட்டது**

**<u>பொருள் எண். 18</u>**

விக்கிரமசிங்கபுரம் நகராட்சி காரையார் சின்ன மயிலாறு பகுதியில் ,காணி மக்கள் பயன்பாட்டிற்காக தாமிரபரணி ஆற்றின் குறுக்கே , புதியதாய இரும்பு பாலம் அமைக்கும் பணி மேற்கொள்ள, சிறப்பு பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் , நிதி ஒதுக்கீடு பெறப்பட்டு, நிர்வாக அனுமதியும் பெறப்பட்டுள்ளது. மேற்கண்ட திட்டத்தின் கீழ் அமைக்கப்படும் இரும்பு நடை மேடை பாலத்தின் உயரத்தினை (MFL) வெள்ள காலத்தில் ஏற்படும் தண்ணீர் மட்டத்தின் உயரத்தினை கருத்திற் கொண்டு, 4.50 மீட்டர் உயரத்தில் இருந்து 5.50 மீட்டர் உயர்த்திற்கு உயர்த்தி அமைக்கவும், திருநெல்வேலி அரசு பொறியியற் கல்லூரி உதவி பேராசிரியர் மற்றும் குழுவினர் மேற்கண்ட பாலத்தினை ஆய்வு மேற்கொண்டு, ஏற்கனவே வடிவமைப்பில் (Structural Design) கூடுதல் strengthening செய்யும் பொருட்டு வழங்கப்பட்ட அறிவுரையின் அடிப்படையிலும், பாலத்தின் உறுதிதன்மையினை அதிகப்படுத்த வேண்டியும், பணியின் அவசியம் கருதி நகராட்சி பொறியாளர் அவர்களால், தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீட்டுத் தொகை ரூ. 20.00 இலட்சத்திற்கு அனுமதி வேண்டியும், மேற்கண்ட பணியினை இந்நகராட்சி பொது நிதியில் இருந்து மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கு

**அலுவலகக்குறிப்பு**

சிறப்பு பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்படும் பணியினை முழுமையாக முடிக்கும் பொருட்டும், பாலத்தின் உறுதி தன்மையினை அதிகப்படுத்தும் பொருட்ட, தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீட்டுத் தொகை ரூ. 20.00 இலட்சத்திற்கு மன்றம் அனுமதிக்கலாம் , பணியினை இந்நகராட்சி பொது நிதியில் இருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

**தீர்மான எண் : 813 / மன்றம் அனுமதிக்கப்பட்டது**

**<u>பொருள் எண். 19</u>**

விக்கிரமசிங்கபுரம் நகராட்சி அய்யனார்குளம் செல்லும் மெயின் ரோட்டில், நமக்கு நாமே திட்டத்தின் கீழ் தடுப்பு சுவர் அமைக்கப்பட்டு வருகிறது. மேற்கண்ட தடுப்பு சுவர் அமைக்கும் இடத்திற்கும், சாலைக்கும் இடையே உள்ள பகுதியில், மண் அரிப்பு ஏற்பட்டு மிகவும் பாலமாக காணப்படுகிறது. இதனால் மழை காலங்களில் மேலும் மண் அரிப்பு ஏற்பட்டு தார் சாலை சிதிலமடையவும், வாகன ஒட்டிகள் மற்றும் பொதுமக்கள் செல்லும் போது விபத்து ஏற்படும் அபாயம் உள்ளதால், சாலையினை பாதுகாக்கவும், விபத்துகளை தவிர்க்க வேண்டியும், மேற்கண்ட பகுதியில் மண் நிரப்ப வேண்டியுள்ளது. இப்பணி மேற்கொள்ள தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீட்டுத் தொகை ரூ. 2.10 இலட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டியும், பணி மேற்கொள்ளவும், செலவினத்தை இந்நகராட்சி பொது நிதியில் இருந்து மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கு

**அலுவலகக்குறிப்பு**

அய்யனார்குளம் செல்லும் மெயின் சாலை என்பதால், அப்பகுதி பொது மக்களின் நலன் கருதியும், சாலையினை பாதுகாக்க வேண்டியும் தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீட்டுத் தொகை ரூ. 2.10 இலட்சத்திற்கு மன்றம் அனுமதி வழங்கலாம், பணி மேற்கொள்ளவும், செலவினத்தை இந்நகராட்சி பொது நிதியில் இருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்

**தீர்மான எண் : 814 / மன்றம் அனுமதிக்கப்பட்டது**

**பொருள் எண். 20**

விக்கிரமசிங்கபுரம் நகராட்சி பகுதி பொது மக்களுக்கு இந்நகராட்சி மூலம் பராமரிக்கப்பட்ட வரும் மேல்நிலை நீர் தேக்கத் தொட்டிகள் மற்றும் தரைமட்ட நீர் தேக்கத் தொட்டிகள் வழியாக நாள் தோறும் குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. மேற்கண்ட தொட்டிகளை ஆய்வு மேற்கொண்ட நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் அவர்களால், வம்பளந்தான் பாறை தரை மட்ட நீர் தேக்கத் தொட்டி மற்றும் , மேட்டுத்தங்கம்மன் கோவில் மேல்நிலை நீர் தேக்கத் தொட்டிகளில் ஏற்பட்டுள்ள சிறு பழுதுகள் மற்றும் பராமரிப்பு பணியினை உடன் மேற்கெள்ள அறிவுறுத்தப்பட்டுள்ளது.அதன் படி மேற்கண்ட மேல்நிலை நீர் தேக்கத் தொட்டி மற்றும் தரைமட்ட நீர் தேக்கத் தொட்டிகள் மற்றும் அதன் அமைவிடங்களில், பராமரிப்பு பணி மேற்கொள்ள வேண்டி தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீட்டுத் தொகை ரூ. 4.75 இலட்சத்திற்கு மன்றம் அனுமதி வேண்டியும், பணி மேற்கொள்ள வேண்டியும், செலவினத்தை இந்நகராட்சி குடிநீர் நிதியில் இருந்து மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கு

**அலுவலகக்குறிப்பு**

பணியின் அவசியம் கருதி தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீட்டுத் தொகை ரூ.4.75 இலட்சத்திற்கு மன்றம் அனுமதி வழங்கலாம், பணி மேற்கொள்ளவும், செலவினத்தை இந்நகராட்சி குடிநீர் நிதியில் இருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்

**தீர்மான எண் : 815 / மன்றம் அனுமதிக்கப்பட்டது**

**பொருள் எண். 21**

சென்னை நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் ந.க.எண்.24504/2025/யுபிஉ, நாள்.02.07.2026ந் தேதிய கடிதத்தில் நகர்பகுதியினை பசுமை மயமாக்கிடும் பொருட்டு மரம் நட்டு பராமரிக்க வேண்டிய இடங்களை கண்டறிந்து அவற்றில் மரம் நடவு செய்து தொடர் பராமரிப்பு செய்திட தெரிவிக்கப்பட்டுள்ளது. மேற்கண்ட கடிதத்தில் விக்கிரமசிங்கபுரம் நகராட்சிக்கு 19000 மரக்கன்றுகள் இலக்காக நிர்ணயிக்கப்பட்டுள்ளது. எனவே, இந்நகராட்சிக்கு முதற்கட்டமாக 3000 மரக்கன்றுகள் வாங்கப்பட்டதற்கான பட்டியல் தொகை ரூ.1,28,000/- வரப்பெற்றுள்ளது. எனவே, மேற்கண்ட பட்டியல் தொகை ரூ.1,28,000/-க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. ந.க.எண். 575/2026/எச்1

**அலுவலகக்குறிப்பு**

மன்றம் அனுமதிக்கலாம்

**தீர்மான எண் : 816 / மன்றம் அனுமதிக்கப்பட்டது**

**பொருள் எண். 22**

திருநெல்வேலி மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் மற்றும் சார் ஆட்சியர், சேரன்மகாதேவி ஆகியோரால் பாபநாசம் திருக்கோவில் தாமிரபரணி நதியின் சுகாதாரக்கேடு தொடர்பாக உயர்நீதிமன்ற மதுரை கிளையின் ஆணைகளின் படி மேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கைகள் குறித்து ஆய்வுக்கூட்டம் நடத்தப்பட்டதில் பாபநாசம் தாமிரபரணி ஆற்றில் விடப்படும் கழிவு துணிகளை இந்நகராட்சி எல்கைக்குட்பட்ட கட்டபொம்மன் காலனி FSTP வளாகத்தில் வைக்கப்பட்டிருந்ததை உடனே அப்புறப்படுத்தி நடவடிக்கை எடுக்க கோரப்பட்டது. அதன் படி SAM ECO RADIAL VISON Environment, Chennai என்ற நிறுவனத்தின் மூலம் அப்புறப்படுத்தியதற்கு உண்டான தொகை ரூ.40,000/-ஐ SAM ECO RADIAL VISON Environment, Chennai என்ற நிறுவனத்திற்கு வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. ந.க.எண். 1965/2015/எச்1

**அலுவலகக்குறிப்பு**

மன்றம் அனுமதிக்கலாம்

**தீர்மான எண் : 817 / மன்றம் அனுமதிக்கப்பட்டது**

**பொருள் எண். 23 818**

விக்கிரமசிங்கபுரம் நகராட்சி எல்கைக்குட்பட்ட பகுதிகளில் பொதுசுகாதார பணிகளின் அவசர அவசியம் கருதி பொதுசுகாதாரப்பணிகள் மேற்கொள்ள 2026-2027ம் ஆண்டிற்கு தேவைக்கேற்ப பொதுசுகாதார தளவாடச்சாமான்கள் வாங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| வ.எண் | பொருள் | நாகாஸ் கெமிக்கல்ஸ், சொக்கம்பட்டி | வாசன் ஏஜென்சி, கல்லிடைகுறிச்சி | ஸ்ரீ நாச்சியார் டிரேடர்ஸ், கடையநல்லூர் |
|---|---|---|---|---|
| | | ரூ. | ரூ. | ரூ. |
| 1 | மண்வெட்டி (செங்கோட்டை) | 980 | 990 | 1010 |
| 2 | களைவெட்டி (சிறியது) | 610 | 625 | 650 |
| 3 | இருப்புவாளி (சிறியது) | 920 | 925 | 930 |
| 4 | இரும்புவாளி (பெரியது) | 710 | 725 | 720 |
| 5 | கையுறை | 161 | 162 | 165 |
| 6 | தூக்குமாறு (பெரியது) | 430 | 435 | 450 |
| 7 | தூக்குமாறு (சிறியது) | 42 | 45 | 50 |
| 8 | இரும்பு சட்டி (சிறியது) | 280 | 295 | 280 |
| 9 | இரும்பு சட்டி (பெரியது) | 280 | - | - |
| 10 | கடப்பாறை | 1400 | 1450 | 1500 |
| 11 | முள் கரண்டி (4 பல்) | 550 | 560 | 610 |
| 12 | 6 அடி நீளம் கொண்ட வாறுகால் கரண்டி | 920 | 950 | 950 |
| 13 | உருக்கு அருவாள் | 950 | 970 | 1100 |
| 14 | காலுறை | 680 | 700 | 1100 |
| 15 | ஒளிரூட்டும் சட்டை | 250 | 260 | 320 |
| 16 | மழைநீர் கவசம் (Rain Coat) | 1200 | 1225 | 1250 |
| 17 | வாறுகாலில் மருந்து அடிக்கும் இயந்திரம் | 9500 | 9700 | 10200 |
| 18 | கழிப்பறை சுத்தம் செய்யும் பிரஸ் | 180 | 190 | 210 |
| 19 | குப்பை தொட்டி (Trash Bin) | - | - | - |
| 20 | தூய்மை பணியாளர் சீருடை | 650 | 670 | 700 |
| 21 | தொப்பி | 150 | 170 | 170 |
| 22 | விசில் | 20 | 25 | 22 |
| 23 | குப்பை அள்ளும் முறம் | 260 | 265 | 270 |
| 24 | குப்பை வாங்கும் பாக்ஸ் | 680 | 675 | 720 |
| 25 | 1 ½ அடி அளவு கொண்ட முள் கொறடு | 610 | 615 | 650 |
| 26 | முக கவசம் | 22 | 23 | 25 |
| 27 | ஒட்டடை துடைப்பான் | 680 | 690 | 750 |

**அலுவலகக்குறிப்பு**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. பொதுசுகாதார பணியின் அவசர அவசியம் கருதி வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளி கொடுத்துள்ள நாகாஸ் கெமிக்கல்ஸ், சொக்கம்பட்டி நிறுவனத்திடமிருந்து பொருட்கள் வாங்குவதற்கும் மன்றம் அனுமதிக்கலாம். ந.க.எண். 1161/2022/எச்1

தீர்மான எண் : 818 / மன்றம் அனுமதிக்கப்பட்டது

**பொருள் எண். 24**

விக்கிரமசிங்கபுரம் நகராட்சி எல்கைக்குட்பட்ட பகுதிகளில் பொதுசுகாதார பணிகளின் அவசர அவசியம் கருதி பொதுசுகாதாரப்பணிகள் மேற்கொள்ள 2026-2027ம் ஆண்டிற்கு தேவைக்கேற்ப பொதுசுகாதார கிருமி நாசினிகள் வாங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| வ.எண் | பொருள் | நாகாஸ் கெமிக்கல்ஸ், சொக்கம்பட்டி | வாசன் ஏஜென்சி, கல்லிடைகுறிச்சி | ஸ்ரீ நாச்சியார் டிரேடர்ஸ், கடையநல்லூர் |
|---|---|---|---|---|
| | | ரூ. | ரூ. | ரூ. |
| 1 | பிளிச்சிங் பவுடர் 1 கிலோ | 46 | 50 | 48 |
| 2 | சுண்ணாம்புத்தூள் 1 கிலோ | 11.50 | 20 | 18 |
| 3 | பவுடர் 1 கிலோ | 1180 | 1250 | 160 |
| 4 | பைத்திரியம் 1 லிட்டர் | 1250 | 1350 | 60 |
| 5 | டெம்பி பாஸ் 1 லிட்டர் | 920 | 1010 | 150 |
| 6 | வெ.பினாயில் 1 லிட்டர் | 60 | 65 | 280 |
| 7 | க.பினாயில் 1 லிட்டர் | 140 | 170 | 1250 |
| 8 | லெமன் கிராஸ் 1 லிட்டர் | 1210 | 1400 | 1300 |
| 9 | செண்டு லோசன் 1 லிட்டர் | 980 | 1300 | 980 |
| 10 | சோப் ஆயில் 1 லிட்டர் | 120 | 160 | 1350 |
| 11 | 1 லிட்டர் | 260 | 300 | 1250 |

**அலுவலகக்குறிப்பு**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. பொதுசுகாதார பணியின் அவசர அவசியம் கருதி வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளி கொடுத்துள்ள நாகாஸ் கெமிக்கல்ஸ், சொக்கம்பட்டி நிறுவனத்திடமிருந்து பொருட்கள் வாங்குவதற்கும் மன்றம் அனுமதிக்கலாம். ந.க.எண். 1161/2022/எச்1

தீர்மான எண் : 819 / மன்றம் அனுமதிக்கப்பட்டது

**பொருள் எண். 25**

சென்னை நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் ந.க.எண்.27966/2021/எச்1 நாள்.08.07.2026ந் தேதிய சுற்றறிக்கையில் விக்கிரமசிங்கபுரம் நகராட்சியில் பொதுசுகாதாரப்பிரிவில் பணிபுரியும் தூய்மை பணியாளர்கள் மற்றும் அவர்களது குடும்ப உறுப்பினர்களுக்காக பல்வேறு நலன்கள், சமூகப்பாதுகாப்பு ஆகியவை தொடர்பான தூய்மை பணியாளர்கள் மேம்பாட்டு முகாம் 23.07.2026 அன்று நடைபெற்ற முகாமிற்கான கீழ்க்கண்ட செலவினங்கள் மேற்கொள்ளப்பட்டன.

| வ.எண் | விவரம் | தொகை (ரூ) |
|---|---|---|
| 1 | மண்டப வாடகை, டேபிள், சேர், பெஞ்சு, மின்சாரம், Cleaning Charges | ரூ.13,530/- |
| 2 | 10 கணினிகள் வாடகை | ரூ.63,000/- |
| 3 | பிரியா பிரிண்டிங் பிரஸ் | ரூ.10,000/- |
| 4 | Star and Ants (Flex with Press) | ரூ.21,000/- |
| 5 | மதிய உணவு (ஜமீன்தார்) | ரூ.49,000/- |

| | | |
|---|---|---|
| 6 | பேப்பர் கிளாக், ஸ்விட்ச் போர்டு, சவுண்ட் செட், வண்டி வாடகை | ரூ.8200/- |

எனவே, மேற்கண்ட விவரப்படி மேற்கொள்ளப்பட்ட செலவினத்தொகைக்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. ந.க.எண். 0766/2026/எச்1.

**அலுவலகக்குறிப்பு**

மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண் : 820 / மன்றம் அனுமதிக்கப்பட்டது**

**பொருள் எண். 26**

சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளை வழக்கு எண். WP(MD)NO.18560 / 2026 நாள்.23.07.2026ந் தேதிய தீர்ப்புரையின் படியும், திருநெல்வேலி மாவட்ட ஆட்சித்தலைவர் மற்றும் சார் ஆட்சியர், சேரன்மகாதேவி ஆகியோர்களால் பாபநாசம் திருக்கோவில் தாமிரபரணி நதியின் சுகாதாரக்கேடு தொடர்பாக இந்நகராட்சி அலுவலகத்தில் வைத்து 04.08.2026 அன்று ஆய்வுக்கூட்டம் நடத்தப்பட்டதில் காவல்துறையின் ஆலோசனைகளைப்பெற்று தேவையின் அடிப்படையில் ஆற்றுப்பகுதியில் சுகாதாரக்கேட்டினை கண்காணிப்பு செய்ய உரிய கண்காணிப்பு கேமரா பொருத்தவும், அதற்கான உத்தேச செலவுத்தொகை ரூ.56,000/-க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. ந.க.எண். 1965/2015/எச்1

**அலுவலகக்குறிப்பு**

மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண் : 821 / மன்றம் அனுமதிக்கப்பட்டது**

**பொருள் எண். 27 822**

சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளை வழக்கு எண். 18560/2026ன் நாள் : 23.07.2026 தேதிய தீர்ப்புரையின்படி, திருநெல்வேலி மாவட்ட ஆட்சியர் மற்றும் சேரன்மகாதேவி சார் ஆட்சியர் அவர்களின் அறிவுரையின் படி 04.08.2026 அன்று அனைத்து துறைகளுடன் விக்கிரமசிங்கபுரம் நகராட்சி மன்ற கூட்ட அரங்கில் ஆய்வு கூட்டம் நடத்தப்பட்டு தாமிரபரணி ஆற்றில் துணிகள் போடாமலும் மற்றும் துணிகள், கழிவுகளை போடுபவர்களை கண்காணித்து அபராதம் விதிக்க 10பணியாளர்களை மாவட்ட ஆட்சித்தலைவர் நிர்ணயம் செய்துள்ள ஊதிய விகித்தில் தற்காலிமாக பணியமர்த்திக்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது ந.க.எண். 1965/2015/எச்1

**அலுவலகக்குறிப்பு**

மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண் : 822 / மன்றம் அனுமதிக்கப்பட்டது**

**பொருள் எண். 28 823**

சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளை வழக்கு எண். WP(MD)NO.18560/2026 நாள்.23.07.2026ந் தேதிய தீர்ப்புரையினை பொதுமக்கள் அறியும் வண்ணம் தாமிரபரணி நதிக்கரையில் 8 x 8 அளவில் 3 எண்ணம், 4 x 4 அளவில் 10 எண்ணம் பிளக்ஸ் போர்டு வைப்பதற்கும், அதற்கான உத்தேச செலவுத்தொகை ரூ.1,20,000/-க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. ந.க.எண். 1965/2015/எச்1.

**அலுவலகக்குறிப்பு**

மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண் : 823 / மன்றம் அனுமதிக்கப்பட்டது**

**பொருள் எண். 29 824**

திருநெல்வேலி மாவட்ட ஆட்சித்தலைவர் மற்றும் சார் ஆட்சியர், ஆகியோரின் அறிவுரையின் படி பாபநாசம் தாமிரபரணி ஆற்றில் துணி மற்றும் கழிவுகளை கொட்டுபவர்களுக்கு அபராத தொகையாக ரூ.500/-

விதிக்க இந்நகர்மன்ற தீர்மான எண்.444, நாள்.25.07.2024ல் அனுமதி வழங்கப்பட்டுள்ளது. தற்போது சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளை வழக்கு எண். WP(MD)NO.18560/2026 நாள்.23.07.2026ந் தேதிய தீர்ப்புரையின் படியும். மாவட்ட ஆட்சியர் அவர்களால் நேரடி மற்றும் ஆய்வுக்கூட்டங்களில் வழங்கப்பட்ட அறிவுரைகளின் அடிப்படையில் மேற்கண்ட 25.07.2024ம் தேதிய தீர்மானம் எண்.444ஐ இரத்து செய்து விட்டு, அதற்கு மாற்றாக அபராத தொகையாக ரூ.2,000/- விதிக்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது ந.க.எண்.1965/2015/எச்1.

**அலுவலகக்குறிப்பு**

மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண் : 824 / மன்றம் அனுமதிக்கப்பட்டது**

**பொருள் எண். 30 825**

நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், திருநெல்வேலி அவர்களின் அறிவுரையின் படி இந்நகராட்சி எல்கைக்குட்பட்ட பகுதிகளில் குப்பைகளை கொட்டாதீர்கள் என்ற வாசகத்துடன் விளம்பர பதாகைகள் வைப்பதற்கும், அதற்கான உத்தேச செலவுத்தொகை ரூ.37500/-க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. ந.க.எண். 766/2026/எச்1.

**அலுவலகக்குறிப்பு**

மன்றம் அனுமதிக்கலாம் , மேற்கண்ட தொகையினை இந்நகராட்சி பொதுநிதியில் இருந்து செலவு செய்வதற்கும் மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண் : 825 / மன்றம் அனுமதிக்கப்பட்டது**

**பொருள் எண். 31**

விக்கிரமசிங்கபுரம் நகராட்சி பகுதி பாபநாசம் கோவில் அருகில் வடபுறம் அமைந்துள்ள வாகனகாப்பகம் வளாகத்தின் மேற்குபகுதியில் சுற்றுலா வளர்ச்சி மான்யநிதி 2025-26 ஆம் ஆண்டு நிதியின் கீழ் கட்டப்பட்டுள்ள கழிப்பிடம் மற்றும் பெண்கள் உடைமாற்றும் அறை பணிமுடிந்து பொதுஏலம்விடும் பொருட்டு இந்நகராட்சி பொறியில் பிரிவில் இருந்து அறிக்கை சமர்பிக்கப்பட்டுள்ளது. அதன்படி மேற்படி கழிப்பிடம் மற்றும் பெண்கள் உடைமாற்றும் அறைக் கட்டணம் வசூல் செய்யும் உரிமம் மூன்றாண்டு கால தொகுப்பிற்கு ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி மூலமாக கீழ்கண்ட விபரப்படி குத்தகைக்கு விடலாம்.

| இனம் | வைப்புத் தொகை | கொடுக்கப்பட வேண்டிய சொத்து மதிப்பு சான்று | வங்கிய சொத்துமதிப்பு சான்று கொடுக்க இயலாதவர்கள் செலுத்த வேண்டிய கூடுதல் வைப்புத் தொகை | மின் வைப்புத் தொகை | குத்தகை காலம் |
|---|---|---|---|---|---|
| பாபநாசம்கோவில் அருகில் வடபுறத்தில் உள்ள வாகனகாப்பகம் வளாகத்தில் | 5,00,000 | 20,00,000 | 2,00,000 | 10000 | ஒப்படைக்கும் நாள் முதல் |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| மேற்கு பகுதியில் கட்டப்பட்டுள்ள கட்டண கழிப்பிடம் மற்றும் பெண்கள் உடைமாற்றும் அறை கட்டணம் வசூல் செய்யும் உரிமம் | | | | | மூன்றாண்டு முடிய |

**கட்டணகழிப்பிடத்திற்கு கட்டணவிபரம்**

| வ.எண் | விபரம் | வசூலிக்கப்பட வேண்டிய தொகை |
|---|---|---|
| 1 | சிறுநீர் மற்றும் கழிப்பிடம் | ரூ.5 |
| 2 | உடைமாற்றும் கட்டணம் | ரூ.10 |

**பொதுக்கட்டுப்பாடு**

குத்தகை இனங்களானது 1998 தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டத்திற்கு ஏலச்சம்பந்தமாக அமுலில் இருக்கும் விதிகளுக்கு உப விதிகளுக்கும் சட்டதிட்டங்களுக்கும் இனிமேல் அமுலுக்கு கொண்டு வரப்படும் உத்தரவுகளுக்கும் பொதுக்கட்டுப்பாட்டுகளுக்கும் மற்றும் சிறப்பு கட்டுபாட்டுகளுக்கும் உட்பட்டவையாகும் .

1. ஆரம்பத்தில் ஏலத்தின் மூலம் பெறப்படும் குத்தகை தொகையில், இரண்டாமாண்டில் 5 சதவீதம் குத்தகைத்தொகை உயர்வும், மூன்றாமாண்டில் முந்தைய ஆண்டின் தொகையில் 5 சதவீதம் குத்தகை தொகை உயர்வும் செய்யப்படும்.

   உதாரணம்: ஆரம்ப ஆண்டு குத்தகை தொகை – ரூ.100/-

   2 ம் ஆண்டிற்கான குத்தகை தொகை -ரூ.105/-

   3 ம் ஆண்டிற்கான குத்தகை தொகை -ரூ.110.25/-
2. மூன்றாண்டுகளுக்கு கட்டணம் வசூல் செய்யும் உரிமம் பொது ஏலத்தில் விடப்படும்.
3. மூன்றாண்டு கால அளவு என்ற தொகுப்பில் கட்டணம் வசூலிக்கும் குத்தகைதாரர் காலமானால் அவரின் வாரிசு தாரர் அனுபவ உரிமையினை பெறுவார். வாரிசு தாரருக்கு விருப்பம் இல்லை எனில் உரிமம் மறு ஏலம் விடப்படும்.
4. குத்தகை நிபந்தனைகள் மற்றும் வரையறைகள் தற்கால மாறுதலுக்கேற்ப அரசின் வழிகாட்டுதலின் படி திருத்தியமைக்க ஆணையாளருக்கு அதிகாரம் உண்டு.
5. குத்தகை உரிமம் ஏலம் ஜாரியானால் சம்மந்தப்பட்ட குத்தகைதாரர் ஒராண்டுக்குரிய குத்தகை தொகை முழுவதையும் ஏலம் விடப்பட்ட மூன்று தினங்களுக்குள் நகராட்சியில் செலுத்த வேண்டும்.
6. குத்தகை முன்வைப்புத்தொகை மற்றும் கூடுதல் தொகைக்கு வட்டி ஏதும் வழங்கப்படமாட்டாது.
7. குத்தகை வைப்புத்தொகை மற்றும் கூடுதல் பொறுப்புதொகையினை குத்தகை உரிமம் 3 வது ஆண்டின் ஈடு செய்யப்படும்.
8. வைப்புத்தொகை, கூடுதல் வைப்புத்தொகை,ரொக்கம்/சொத்துமதிப்பு சான்று (சால்வன்சி) சான்றிதழ் உரியவாறு உரிய காலத்தே செலுத்தப்படவேண்டும்.
9. குத்தகைத்தொகை 12 மாதங்களுக்கானதை ஒவ்வொரு ஆண்டு முடிவிற்கும் அடுத்த ஆண்டுக்குரிய தொகையினை மூன்றுமாதத்திற்கு முன்னரே செலுத்தி அனுபவ உரிமையினை புதுப்பித்துக்கொள்ள வேண்டும்.
10. ஏலம் எடுக்கப்பட்ட தொகைக்கு ஏற்ப அரசால் நிர்ணயிக்கப்படும் வருமான வரி ,ஜி.எஸ்.டி, மற்றும் தொழில்வரி செலுத்தப்படவேண்டும்.

11. கட்டணகழிப்பிடம் மற்றும் பெண்கள் உடைமாற்றும் அறையினை சுத்தமாக வைத்திருக்க வேண்டும், துப்புரவு செய்யும் பொறுப்பு குத்தகை தாரரையே சாரும். கட்டண கழிப்பிடத்தின் கழிவுகளை அகற்றும் பொறுப்பு (செப்டிக் டேங்க் கிளீனிங்) குத்தகைதாரர் சொந்த பொறுப்பில் அப்புறப்படுத்தப்படவேண்டும்.
12. மின்கட்டணம் மற்றும் கூடுதல் காப்புதொகை குத்தைகைதாரால் செலுத்தப்படவேண்டும்.
13. குத்தகை நிலுவைக்கு தண்டவட்டி வசூலிக்கப்படும்.
14. குத்தகை ஒப்படைப்பு ஆணை பெற்றவுடன் உரிய காலத்தே ஒப்பந்தபத்திரம் (Agreement) அளிக்கப்படவேண்டும்.
15. நகராட்சி சொத்துக்களுக்கு சேதம் ஏற்பட்டால் இழப்பினை குத்தகைதாரரிடம் ஈடு செய்யப்படும்.
16. எக்காரணத்திற்காகவும், எந்த நிகழ்வுகளுக்காகவும், குத்தகை தொகையை குறைக்க இயலாது.
17. குத்தகை நிபந்தனைகளை மீறினாலோ நிர்ணயிக்கப்பட்ட கட்டணத்தைவிட கூடுதல் கட்டணம் வசூல் செய்வதாக கண்டறிப்பட்டாலோ அனுபவ உரிமம் ரத்து செய்யப்பட்டு வைப்புத்தொகை பறிமுதல் செய்யப்படுவதோடு மறுஏலம் விடப்படும், மறுஏலம் விடப்படும் நிலையில் நகராட்சிக்கு இழப்பு ஏற்படுமாயின் இழப்பீடு தொகை முழுவதையும் குத்தகைதாரரிடம் வசூல் செய்ய சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.
18. கட்டணகழிப்பிடங்கள் மற்றும் பெண்கள் உடைமாற்றும் அறையில் நகராட்சியால் நிர்ணயிக்கப்பட்ட தொகையினை பொதுமக்கள் அறியும் வண்ணம் விளம்பர பலகையாக வைக்கப்படவேண்டும்.
19. கட்டணகழிப்பிடம் மற்றும் பெண்கள் உடைமாற்றும் அறைக்கு வசூல் செய்யப்படும் கட்டணங்களுக்கு குத்தகைதாரர் சொந்த செலவில் உரிய ரசீது வழங்கப்படவேண்டும், குத்தகை தாரரால் வழங்கப்படும் ரசீதுகள் நகராட்சி அலுவலகத்தில் ஒப்படைத்து நகராட்சி அலவலக முத்திரை பெற்றுக்கொள்ளப்படவேண்டும், முத்திரை பெறாத ரசீதுகள் வழங்கப்படகூடாது.
20. குத்தகைதாரரால் வசூல் செய்ய பணியமர்த்தப்படும் பணியாளர்களின் புகைப்படம் ஆதார் விபரம் நகராட்சி அலுவலகத்தில் ஒப்படைக்கப்படவேண்டும்.
21. நகராட்சி ஆணையாளர் மற்றும் அரசால் அவ்வப்போது பிறப்பிக்கப்படும் கட்டுப்பாடுகள் மற்றும் உத்தரவுகள் அனைத்தையும் குத்தகைதாரர்கள் கடைபிடிக்கப்படவேண்டும்.
22. மாதந்திர மின் கட்டணங்களை குத்தகைதாரர்களே செலுத்திக்கொள்ள வேண்டும்

அலுவலககுறிப்பு:

1. பாபநாச வாகனகாப்பக வளாகத்தில் கட்டப்பட்டுள்ள கட்டண கழிப்பிடம் மற்றும் பெண்கள் உடைமாற்றும் அறை பொது ஏலம் மற்றும் ஒப்பந்தபுள்ளி கோர மன்றம் அனுமதிக்கலாம்.
2. பொதுஏலம் மற்றும் ஒப்பந்தபுள்ளி கோர E-TENDER , உள்ளூர் மற்றும் வெளியூர் தினசரி நாளிதழில் விளம்பரம் செய்ய மன்றம் அனுமதிக்கலாம்.

பொது ஏலம் மற்றும் குத்தகை தொடர்பாக விளம்பர செலவினங்களையும் மற்றும் வழக்கு ஏதும் ஏற்படுமாயின் வழக்கினை ஏற்று நடத்தவும் அதற்கான செலவினங்களை நகராட்சி பொதுநிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண் : 826 / மன்றம் அனுமதிக்கப்பட்டது**

**<u>பொருள் எண். 32</u>**

விக்கிரமசிங்கபுரம் நகராட்சி வார்டு எண்-3 ல் காவல்நிலையம் அருகில் அமைந்துள்ள கட்டண கழிப்பிடம் பலமுறை ஏலம் கோரப்பட்டும், ஏலம்கோரவோ ,ஒப்பந்தப்புள்ளி கொடுக்கவோ எவரும் முன்வரவில்லை என்பதாலும் , மேற்படி கட்டணகழிப்பிடத்திற்கு கடந்த காலங்களில் சொர்ப்ப தொகைக்கு விடப்பட்டு குத்தகைதாரர்கள் ஏலத்தொகை செலுத்த வழிவகை இல்லாமல் வசூல் இல்லை என்ற காரணத்தினை கூறி கட்டணகழிப்பிடத்தினை குத்தகைதாரர்கள் நகராட்சியில் திரும்ப ஒப்படைத்துள்ளனர். எனவே மேற்படி கட்டணகழிப்பிடத்தினை பொதுமக்களின் அத்தியாவசிய அவசியம் கருதியும் சேவை நோக்கோடும் பொது இலவச கழிப்பிடமாக பயன்படுத்த மன்றம் அனுமதிக்கலாம்.

**அலுவலககுறிப்பு**

மேற்கண்ட கழிப்டத்தினை சேவை நோக்கோடு பொது இலவச கழிப்பிடமாக பயன்படுத்த மன்றம் அனுமதிக்கலாம். **ந.க.எண்:2585/2023/அ1**

**தீர்மான எண் : 827 / மன்றம் அனுமதிக்கப்பட்டது**

**<u>பொருள் எண். 33</u>**

விக்கிரமசிங்கபுரம் நகராட்சி அலுவலக முதல் தளத்தில் உள்ள கழிப்பறை பகுதியானது, ஏற்கனவே உள்ள கட்டிடத்தில் இருந்து பிரிந்து விரிசல் ஏறபட்டு, சேதமடைந்த நிலையில் உள்ளது. இதனால் மழை காலங்களில் விரிசல் வழியாக மழை நீர் அலுவலகத்திற்குள் வரப்பெறுவதோடு, பாதுகாப்பு இல்லாமல் உள்ளது. இதனால் நகராட்சி பணியாளர்களின் பாதுகாப்பு கருதி மேற்கண்ட கட்டிடத்தினை சரிசெய்யும் பொருட்டும், நகராட்சி அலுவலக வெளிபுறத்தில் வர்ணம் பூ சுதல் பணி மேற்கொள்ளவும் தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீட்டுத் தொகை ரூ. 3.50 இலட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டியும், பணி மேற்கொள்ளவும் அதற்கான செலவினத்தை இந்நகராட்சி பொது நிதியில் இருந்து மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கு

**அலுவலககுறிப்பு**

பணியின் அவசியம் மற்றும் அவசரம் கருதி தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீட்டுத் தொகைக்கு மன்றம் அனுமதி வழங்கலாம், செலவினத்தை இந்நகராட்சி பொது நிதியில் இருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்

**தீர்மான எண் : 828 / மன்றம் அனுமதிக்கப்பட்டது**

**<u>பொருள் எண். 34</u>**

விக்கிரமசிங்கபுரம் நகராட்சி மூலம் பராமரிக்கப்பட்டு வரும், கோட்டைவிளைப்பட்டி, அனவன் குடியிருப்பு, காமராஜ் நகர், சங்கரபாண்டியபுரம் , கொட்டாரம், சந்தனமாரியம்மன் கோவில் மற்றும் ஞானியார் தோப்பு பகுதியில் உள்ள கழிப்பறைகளை பராமரிக்கும் பொருட்டு நகராட்சி பொறியாளர் அவர்களால் தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீட்டுத் தொகை ரூ. 2.00 இலட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டியும், பணி மேற்கொள்ளவும் அதற்கான செலவினத்தை இந்நகராட்சி பொது நிதியில் இருந்து மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கு

**அலுவலககுறிப்பு**

பொது சுகாதாரம் பணியின் அவசியம் மற்றும் அவசரம் கருதி தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீட்டுத் தொகைக்கு மன்றம் அனுமதி வழங்கலாம், செலவினத்தை இந்நகராட்சி பொது நிதியில் இருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்

**தீர்மான எண் : 829 / மன்றம் அனுமதிக்கப்பட்டது**

**<u>பொருள் எண். 35</u>**

விக்கிரமசிங்கபுரம் நகராட்சி பகுதியில், திடக்கழிவு மேலாண்மை பணிகளின் கீழ், வீடு வீடாக சென்று டெங்கு கொசு ஒழிப்பு பணிகள் மேற்கொள்ள ஏதுவாக 30 பணியாளர்கள் ஒப்பந்த அடிப்படையில் ஆட்கொணர்வு வெளிமுகமை மூலம் பணியமர்த்த வேண்டி முறையாக ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு இந்நகராட்சி நகர்மன்ற தீர்மான எண் 630 நாள் 26.06.2025 ன் படி குறைவான ஒப்பந்தப்புள்ளி வழங்கப்பட்டுள்ள BRP Agencies, அகஸ்தியர்பட்டி நிறுவனத்திற்கு கடந்த 27.06.2025 அன்று ஓராண்டு காலத்திற்கு பணி மேற்கொள்ள அனுமதி அளித்து பணி உத்திரவு வழங்கப்பட்டுள்ளது, அதன் படி மேற்கண்ட நிறுவனத்திற்கான ஒப்பந்த காலம் 30.06.2026 உடன் முடிவு பெற்றுள்ளதால், அப்பணியின் அவசியம் மற்றும் அவசரம் கருதியும், தற்போது உள்ள பெருந்தொற்று காலத்தினை சமாளிக்கும் பொருட்டு, ஏற்கனவே பணி மேற்கொள்ளும் BRP Agencies, அகஸ்தியர்பட்டி நிறுவனத்தின் ஒப்பந்த காலத்தினை,மேலும் ஆறு மாத காலத்திற்கு கால நீட்டிப்பு செய்து வழங்கவும் அதற்கான செலவினத்தை இந்நகராட்சி பொதுநிதியில் இருந்து மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கு ந.க.எண் 1453/2023/எச்1

அலுவலககுறிப்பு

தற்போது நகர் பகுதியில் பரவி வரும் டெங்கு காய்சலை தடுக்கும் பொருட்டு, பணியின் அவசியம் மற்றும் அவசரம் கருதி ஏற்கனவே அனுமதிக்கப்பட்டுள்ள விலைவிகிதத்தின் அடிப்படையில், BRP Agencies, அகஸ்தியர்பட்டி நிறுவனத்தின் ஒப்பந்த பணி காலத்தினை மேலும் 6 மாத காலத்திற்கு (01.07.2026 முதல் 31.12.2026 வரை) கால நீட்டிப்பு செய்யலாம், மேலும் செலவீனத்தை இந்நகராட்சி பொது நிதியில் இருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண் : 830 / மன்றம் அனுமதிக்கப்பட்டது**

**<u>பொருள் எண். 36</u>**

சென்னை நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் செயல்முறை உத்திரவின் ந.க.எண் 32945/2022/EA2-SWM-8 நாள் 10.01.2023 ல், நகர்பகுதிகளில் திடக்கழிவு மேலாண்மை பணிகளை ஆட்கொணர்வு வெளிமுகமை மூலம் 3 ஆண்டுகளுக்கு பணி மேற்கொள்ள அனுமதி வழங்கி உத்திரவிடப்பட்டுள்ளது. அதன் படி இந்நகர் பகுதியில் திடக்கழிவு மேலாண்மை பணிகளை ஆட்கொணர்வு வெளிமுகமை மூலம் பணி மேற்கொள்ள வேண்டி, முறையாக ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டு, குறைவான ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள Saram Enviro Services Pvt. Ltd நிறுவனத்தின் மூலம் பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இப்பணிக்கான ஒப்பந்தப்புள்ளி ஆவணங்களில் இப்பணிக்காக அனுமதிக்கப்பட்ட ஒப்பந்தபுள்ளி விலை விகிதத்தினை இரண்டாம் ஆண்டு தொடக்கத்தில் 10 சதவிகிதமும், மூன்றாண் ஆண்டு தொடங்கியதும் முந்தைய ஆண்டு ஒப்பந்தப்புள்ளி தொகையில் இருந்து 10 சதவிகிதமும் உயர்வு செய்து வழங்க வேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன் அடிப்படையில் மேற்கண்ட நிறுவனத்தின் ஒப்பந்த காலம் மூன்றாண்டுகளை கடந்த நிலையில், இரண்டாம் ஆண்டு மற்றும் மூன்றாம் ஆண்டு தொடக்கத்தில் வழங்க வேண்டிய 10 சதவிகித உயர்வு வழங்கப்படாமல் உள்ளதால், மேற்கண்ட இரண்டு ஆண்டுகளுக்கும் சேர்த்து அனுமதிக்கப்பட்ட விலைவிகிதத்தில் இருந்து 20 சதவிவிதம் உயர்வு செய்து வழங்கவும், இதற்கான கூடுதல் செலவீனத்தை இந்நகராட்சி பொது நிதியில் இருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம் ந.க.எண் 3059/2021/இ1

அலுவலககுறிப்பு

திடக்கழிவு மேலாண்மை பணிகளின் அவசியம் கருதியும், வெளிமுகமை பணியாளர்களின் நலன் கருதியும், ஒப்பந்த நிறுவனத்திற்கு இரண்டாம் ஆண்டு மற்றும் மூன்றாம் ஆண்டு தொடக்கத்தில் வழங்க வேண்டிய 10 சதவிகித உயர்வு வழங்கப்படாமல் உள்ளதாலும், மேற்கண்ட இரண்டு ஆண்டுகளுக்கும் சேர்த்து அனுமதிக்கப்பட்ட விலைவிகிதத்தில் இருந்து 20 சதவிவிதம் உயர்வு செய்து 01.09.2026 முதல் ஒப்பந்த நிறுவனத்திற்கு வழங்கவும் , இதற்கான கூடுதல் செலவினத்தை இந்நகராட்சி பொது நிதியில் இருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண் : 831 / மன்றம் அனுமதிக்கப்பட்டது**

ஓம்/- S.P.M.செல்வசுரேஷ் பெருமாள்

நகர்மன்றத் தலைவர்

விக்கிரமசிங்கபுரம் நகராட்சி